## விகடன் இணையதளம் முடக்கம்!

# பா.ஜ.க. வின் பாசிசத் தன்மைக்கு எடுத்துக்காட்டு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

சென்னை, பிப். 18 -

**விகடன் இணையதளத்தில் பிரதமர் மோடி குறித்து கார்ட்டூன் ஒன்றினை வெளியிட்டுள்ளது. இதனை கண்ட ஒன்றிய பா.ஜ.க. அரசு உடனடியாக விகடன் இணையதளத்தை முடக்கி உள்ளது.**

**இச்செய்தி அறிந்ததும் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கண்டனம் தெரிவித்து சமூக வலைதளப் பதிவில் பதிவிட்டுள்ளார்.**

இந்தியாவில் மோடி தலைமையில் பா.ஜ.க. அரசு பதவியேற்றதிலிருந்தே பத்திரிகையாளர்கள், ஊடகவியலாளர்கள், சமூக ஆர்வலர்கள் சுதந்திரமாக தங்கள் கருத்துக்களை பதிவு செய்ய முடியாத அவலநிலை தொடர்ந்து நீடித்து வருகிறது.

அதன்படி நேற்று முன்தினம் விகடன் இணையதளம் பிரதமர் மோடியும் அமெரிக்க அதிபர் டிரம்ப் ஆகியோர் சந்திப்பு குறித்து தனது இணைய தளத்தில் கருத்துப்படம் ஒன்றினை வெளியிட்டு இதனை கண்ணுற்ற ஒன்றிய அரசு உடனடியாக விகடன் இணையதளத்தை முடக்கியுள்ளது.

இச்செய்தி அறிந்ததும் முதல்வர் மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம் தெரிவித்து சமூக வலைதளப் பதிவில் பதிவிட்டுள்ளார்.

இது குறித்து முதல்வர் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

**இதழியலில் நூறாண்டு காலமாக இயங்கி வரும் விகடனின் இணைய தளம் முடக்கப்பட்டிருப்பதற்குக் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

**கருத்துகளுக்காக ஊடகங்கள் முடக்கப்படுவது ஜனநாயகத்துக்கு அழகல்ல! பா.ஜ.க.,வின் பாசிசத் தன்மைக்கு இது எடுத்துக்காட்டு ஆகும். முடக்கப்பட்ட இணையதளத்துக்கு உடனடி அனுமதி வழங்கக் கேட்டுக் கொள்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவிட்டுள்ளார்.

## ‘வாட்ஸ் அப்’பில் வரும் செய்தி!




## மீனவர்கள் கைது செய்யப்படுவதை தடுக்கத் தவறிய

# ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து தி.மு.க. ஆர்ப்பாட்டம்!

## இராமேஸ்வரத்தில் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் ஆயிரக்கணக்கான மீனவர்கள் திரண்டு கண்டன முழக்கம்!

இராமேஸ்வரம், பிப். 18–

தமிழ்நாட்டு மீனவர்கள் கைது செய்யப்படுவதைத் தடுக்கத் தவறிய ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து ராமேஸ்வரத்தில் தி.மு.க. சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

எல்லைத்தாண்டி மீன்பிடித்ததாகக்கூறி தமிழ்நாட்டு மீனவர்களை இலங்கை கடற்படை கைது செய்வது தொடர் கதையாகி வருகிறது. இந்த விவகாரத்தில் நடவடிக்கை எடுக்குமாறு ஒன்றிய அரசுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகி



றார். ஆனால், தமிழ்நாட்டு மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தும் இலங்கை அரசை கண்டிக்காமல், மோடி தலைமையிலான ஒன்றிய அரசு வேடிக்கை பார்த்து வருகிறது.

இந்நிலையில், ஒன்றிய பா.ஜ.க. அரசின் இந்த செயலை கண்டித்து ராமேஸ்வரத்தில் தி.மு.க. சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழுத்தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி., தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் ஆயிரக் கணக் கானோர் பங்கேற்றனர். அப்போது, ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிராக அவர்கள் முழக்கமிட்டனர்.

இதையடுத்து, செய்தியாளர்களிடம் பேசிய நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி எம்.பி., தமிழ்நாட்டில் மும்மொழிக் கொள்கையை திணிக்கும் ஒன்றிய அரசுக்கு கண்டனம் தெரிவித்தார். தமிழ்நாட்டில் இருமொழிக்கொள்கைதான், தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும் என்று கூறினார்.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்டச் செயலாளர் காதர் பாஷா முத்துராம லிங்கம், மாநில மீனவரணி செயலாளர் ஜோசப் ஸ்டாலின், நவாஸ் கனி எம்.பி, சட்டமன்ற உறுப்பினர் முருகேசன் மீனவ சங்க நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## ஒன்றிய அரசு கல்விக்கு நிதி ஒதுக்காததால்

# தமிழ்நாட்டில் 40 இலட்சம் மாணவர்களின் எதிர்காலம் கேள்விக்குறி!

## மாநிலங்களவையில் இரா.கிரிராஜன் பேச்சு!

புதுடெல்லி, பிப்.18-

இந்தியை திணிக்கும் நோக்கில் PM SHRI திட்டத்தில் கையெழுத்திட கட்டாயப்படுத்துவதை, தமிழ்நாடு அரசு ஏற்காது எனவும், இது 40 லட்சம் மாணவர்களின் நலனுக்கு எதிரான ஒன்றிய அரசின் மொழிரீதியான பயங்கரவாதம் என நாடாளுமன்றம் மாநிலங்களவையில் கழக உறுப்பினர் இரா.கிரிராஜன் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

2025ஆம் ஆண்டுக்கான ஒன்றிய அரசின் பட்ஜெட் குறித்து தி.மு.க.வைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் இரா.கிரிராஜன் மாநிலங்களவையில் பேசியதாவது:

நிதியமைச்சர் நிர்மலா சீத்தாராமன் கடந்த 2019ஆம் ஆண்டின் பட்ஜெட்டை தாக்கல் செய்த போது, பாண்டிய மன்னன் அறிவுடை நம்பிக்கு அறிவுரையாக இருந்த புறநானூற்றுப் பாடலையும், 2020ஆம் ஆண்டு முதல் திருக்குறளையும் மேற்கோள் காட்டி பேசியதை குறிப்பிட்டு பேசிய எம்.பி. கிரிராஜன், இந்த முறை திருக்குறள் இடம்பெறவில்லை என்றும், மாறாக தெலுங்கு கவிதையை மேற்கோள் காட்டியுள்ளதாக சாடியுள்ளார்.

ஒன்றிய அரசு மக்களைப் பற்றி சிந்திக்கிறதா என்றால் இல்லை என குற்றம்சாட்டியுள்ள கிரிராஜன், மக்கள்தொகையில் ஒரு சதவிகிதம் மட்டுமே இருந்துகொண்டு வருமானத்தில் 22.6 சதவிகித்தையும், செல்வத்தில் 40.1 சதவிகிதத்தையும் கட்டுப்படுத்தும் சில பில்லியனர்களைப் பற்றி மட்டுமே நினைத்துக்கொண்டிருப்பதாகவும் சுட்டிக் காட்டியுள்ளார்.



நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 9.04 சதவிகிதத்திற்கு தமிழ்நாடு பங்களிக்கும் நிலையில், அதிகாரப்பகிர்வு மூலம் 4.08 சதவிகித்ததை மட்டுமே பெறுகிறது எனவும் தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

மாநிலங்களுக்கான வரி பகிர்வை 42 சதவிகிதமாக 14வது நிதிக் குழு பரிந்துரைத்த நிலையில், அதை 41 சதவிகிதமாக 5வது நிதி குழு குறைத்ததை குறிப்பிட்டுள்ள திமுக எம்.பி. கிரிராஜன், உண்மையான அதிகாரப்பகிர்வு என்பது 32 சதவிகிதமாக மட்டுமே உள்ளதையும் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாட்டில் கல்விக்கான செலவினத்தில் 13.6 சதவிகிதத்தை மாநில அரசு ஒதுக்கும் நிலையில், 2.5 சதவிகிதத்தை மட்டுமே ஒன்றிய அரசு ஒதுக்குகிறது. ஒன்றிய அரசின் அதிகாரப் பகிர்வில் பாரபட்சம் காட்டும் நிலையிலும், உயர்கல்வியில் மாணவர் சேர்க்கையின் தேசிய சராசரி 27 சதவிகிதமாக உள்ள நிலையிலும், தமிழ்நாடு 47 சதவிகிதத்தை எட்டியுள்ளது. தமிழ்நாடு அரசு பலமுறை கோரிக்கை வைத்தும், தேசிய கல்வி இயக்கத்தின் நிதி ரூ. 2,152 கோடியை தர மறுப்பது ஏன் என தனது உரையின்போது கேள்வி எழுப்பிய கிரிராஜன், இந்தியை திணிக்கும் நோக்கில் PM SHRI திட்டத்தில் கையெழுத்திட ஒன்றிய அரசு கட்டாயப்படுத்துவதை ஏற்க முடியாது என்றும், இது 40 லட்சம் தமிழக மாணவர்கள் பாதிக்கும் வகையிலான மாநில அரசின்மீதுதிணிக்கப்படும் மொழிரீதியான பயங்கரவாதம் என்றும் குற்றச் சாட்டை முன்வைத்தார். நாட்டின் வேறு எந்த மாநில அரசு மீதும் எனக்கு பொறாமை இல்லை என குறிப்பிட்ட கிரிராஜன், தமிழ்நாட்டு பெண் நிதியமைச்சர் (தமிழ் மகள்) பட்ஜெட் உரையை தொடங்கிய அரை மணி நேரத்தில் பீகார் மாநிலத்தை நான்கு முறை குறிப்பிட்டதையும், ஆனால் முழு பட்ஜெட் உரையிலும் தமிழ்நாட்டின் பெயரை ஒரு முறை கூட உச்சரிக்கவில்லை என்பதையும் எடுத்துரைத்தார்.

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8.19 சதவிகிதம் பங்களிக்கும் உத்தரப்பிரதேச அரசு, ஒன்றிய அரசிடமிருந்து 17.94 சதவிகிதமும், 2.7 சதவிகித பங்களிப்பை கொடுக்கும் பீகார் அரசு 10.08 சதவிகிதமும் அதிகாரப் பகிர்வை திரும்பப் பெறுகிறது. ஆனால் தமிழ்நாடு அதிக பங்களிப்பை வழங்குகினாலும், உரிய அதிகாரப்பகிர்வை பெறவில்லை. இது தமிழ்நாட்டின் மீது மாற்றந்தாய் மனப்பாண்மையை ஒன்றிய அரசு கொண்டுள்ளது தெரிகிறது. ஏன் இந்த பாகுபாடு? மத்தியில் எதிர்க்கட்சியாக் இருந்துகொண்டு தமிழ்நாட்டில் சிறப்பாக ஆட்சி நடத்துவதால் ஒன்றிய அரசு இந்த மாற்றாந்தாய் மனப்பாண்மை கொண்டுள்ளதா? நாங்கள் சிறப்பாக ஆட்சி நடத்துகிறோம் என பெருமையுடன் சொல்லலாம்.

கிரிராஜன் உரையாற்றியபோது, பிரதமராக பொறுப்பேற்ற நரேந்திர மோடி 2014 ஜுன் 11ல் நாடாளுமன்றத்தில் பேசியபோது, டெல்லியில் சாதகமற்ற ஆட்சி அமைந்தால் மாநிலத்திற்கு என்ன நடக்கும் என்றும், மாநிலங்கள் எதிர்கொள்ளும் சிரமங்களை அனுபவித்திருப்பதாகவும், மாநிலத்தின் வளர்ச்சியை தடுக்கும் சதித்திட்டங்கள் குறித்து தனக்கு முழு அனுபவம் உள்ளதாகவும், மாநிலங்களின் பிரச்னைகளை புரிந்து கொண்ட ஒருவருக்கு, நாட்டின் பிரதமராக பணியாற்ற வாய்ப்புகிடைத்துள்ளதாக குறிப்பிட்டதை சுட்டிக் காட்டி பேசினர். ஒன்றிய அரசு ரயில்வே பட்ஜெட்டை மத்திய பட்ஜெட்டுடன் இணைக்க விரும்புவதாகவும், ஆனால் நிதியமைச்சரின் இந்த பட்ஜெட்டில் “ரயில்வே” என்று எங்கும் குறிப்பிடவில்லை என்றும் கிரிராஜன் தெளிவுபடுத்தி உள்ளார்.

இந்த பட்ஜெட்டில் தமிழகத்தில் மதுரையில் எய்ம்ஸ் கட்டும் பணியை விரைந்து முடிக்க நிதி ஒதுக்கப்படவில்லை. இந்த பட்ஜெட்டில் தமிழ்நாட்டில் உள்ள பரந்தூரில் கிரீன் ஃபீல்ட் விமான நிலையம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கப்படவில்லை. இந்த பட்ஜெட்டில் தமிழ்நாட்டில் தேசிய நெடுஞ்சாலைகளில் சாலை உள்கட்டமைப்பை மேம்படுத்த போதுமான நிதி ஒதுக்கப்படவில்லை. இந்த பட்ஜெட்டில் மதுரை விமான நிலையத்தை விரிவாக்கம் செய்வதற்கும், வேலூர், நெய்வேலியில் விமான நிலையங்கள் அமைப்பதற்கும் நிதி ஒதுக்கப்படவில்லை. என்றும் தி.மு.க. எம்.பி. இரா.கிரிராஜன் உரையாற்றி உள்ளார்.

## தமிழ்நாடு மாணவர்களின் கல்வி வளர்ச்சியில்

# மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் செயல்படும் ஒன்றிய அரசு!

## தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் செல்வப் பெருந்தகை கண்டனம்!

சென்னை, பிப். 18 -

தமிழ்நாட்டு மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் மாற்றாந்தாய் மனப்பான்மையோடும் செயல்படும் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு மக்கள் தகுந்த பாடம் புகட்டுவார்கள் என தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார்.

இது குறித்து செல்வப் பெருந்தகை வெளியிட்டுள்ள சமூகவலைத்தளப் பதிவில், புதிய தேசியக் கல்விக் கொள்கையை ஏற்காததால், தமிழ்நாட்டின் கல்வி வளர்ச்சிக்காக ஒதுக்கிய நிதி 2ஆயிரத்து 152 கோடி ரூபாயை விடுவிக்க முடியாது என்றும்;, அதை ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டும் என்றும் ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிர



தான் பேசியிருப்பது ஆணவத்தின் உச்சம் எனத் தெரிவித்துள்ளார். சுதந்திர இந்தியாவில் கூட்டாட்சித் தத்துவத்துக்கு எதிராகவும், தமிழ்நாட்டு மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் மாற்றாந்தாய் மனப்பான்மையோடும் செயல்படும் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு மக்கள் தகுந்த பாடம் புகட்டுவார்கள் என்றும் அவர் பதிவிட்டுள்ளார்.

# மும்மொழித் திட்டத்தை ஏற்றால்தான் கல்வி நிதி என்பதா?

## ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கண்டனம்!

சென்னை, பிப். 18 -

மும்மொழி திட்டத்தை ஏற்றால்தான் கல்விக்கான நிதி அளிக்க முடியும் எனக் கூறும் ஒன்றிய அரசுக்கு மதிமுக பொதுச் செயலாளர் வைகோ கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து வைகோ வெளியிட்டுள்ள அறிக்கையில், ஒன்றிய அரசின் ஒருங்கிணைந்த பள்ளிக்



கல்வித் திட்டத்தின்கீழ் 2 ஆயிரத்து 401 கோடி ரூபாய் நிதியை ஒன்றிய அரசு விடுவிக்காததால் தமிழ்நாடு அரசுக்கு கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். தேசியக் கல்விக் கொள்கையை ஏற்கும் வரை தமிழ்நாட்டுக்கு நிதி ஒதுக்க முடியாது என்று ஒன்றிய அரசின் கல்வித் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் ஆணவமாக தெரிவித்திருப்பது கண்டனத்துக்குரியது என்றும் அவர் தெரிவித்துள்ளார். ஒன்றிய கல்வித்துறை அமைச்சகம் உடனடியாக தமிழ்நாட்டிற்கு ஒதுக்க வேண்டிய நிதியை விடுவிக்க வேண்டும் என வைகோ கேட்டுக்கொண்டுள்ளார்.

# தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. பரிந்துரையில், ரூ.1.62 கோடி மருத்துவ நிதி உதவி!

சென்னை, பிப். 18-

தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர். தமிழச்சி தங்கபாண்டியன் பரிந்துரையில், பிரதமர் தேசிய நிவாரண நிதியிலிருந்து தென்சென்னை தொகுதி, தமிழ்நாட்டின் பல்வேறு பகுதியைச் சேர்ந்த, பொதுமக்களுக்கு இதுவரை ரூ.1,62,00,000 (ஒரு கோடி அறுபத்தி இரண்டு இலட்சம்) மருத்துவ நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

அதன் விவரம் வருமாறு :

தென்சென்னைத் தொகுதி, தமிழ்நாட்டின் பல்வேறு பகுதியில், இருதய அறுவை சிகிச்சை, சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை, புற்றுநோய் சிகிச்சை ஆகிய சிகிச்சைகளை மேற்கொள்ளும் பொதுமக்கள், தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் அவர்களிடம் மருத்துவ நிதி உதவி கோரியதை அடுத்து, பிரதமர் தேசிய நிவாரண நிதியி லிருந்து, மருத்துவ சிகிச்சைகளுக்கான செலவினத்திற்காக, ஜுலை 2024 முதல் ஜனவரி 2025 வரை, 18 நபர்களுக்கு 46 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நிதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் 3 நபர்களுக்கு கடந்த ஜனவரி மாதம் பரிந்துரைக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது.

இதேபோல் 2019 முதல்



2024 காலகட்டத்தில், இருதய அறுவை சிகிச்சை, சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை, புற்றுநோய் சிகிச்சை, போன்ற சிகிச்சைகளுக்காக, தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி 68 நபர்களுக்கு பரிந்துரை செய்து, ரூ. 1,15,50,000 (ஒரு கோடியே பதினைந்து இலட்சத்து ஐம்பது ஆயிரம்) நிதி பெற்றுத் தந்துள்ளார்.

மேலும், இருதய அறுவை சிகிச்சை, சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை, புற்றுநோய் சிகிச்சை போன்ற சிகிச்சைகள் பெற்று வருபவர்கள், தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி அவர்களை 9344833508 என்ற கைபேசி எண், வாட்சப் எண் மூலமாகவும், 04424401858 என்ற தொடர்பு எண் மூலமாகவும், contact@ithamizhachi.com என்ற மின்னஞ்சல் மூலமாகவும், உரிய மருத்துவமனை சான்றிதழ்களுடன், எந்த நேரத்திலும் தொடர்பு கொள்ளலாம் என தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் தெரிவித்துள்ளார்.

